**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : DVC.6/2022 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-2 | Village: | |
| Name | : பன்னீர்செல்வம் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : கலியபெருமாள் | Age | : 56 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 12.02.2024.**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் டெய்லர் வேலை செய்து வருகிறேன். நான் அரசியல் கட்சியிலும் இருநது வருகிறேன் என்றால் சரிதான். என்னை கே.பி. செல்வம் என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு மனுதாரரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 30 வருடங்களாக தெரியும். எதிர்மனுதாரர்களை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் திருமணத்திற்கு பிறகு சுமார் 15 வருடங்களாக தெரியும். வழக்கின் தரப்பினர்களும் நானும் வேறு வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. மனுதாரர் அழைத்ததின்பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் சொன்னார். மனுதாரரின்

திருமணத்தின்போது எவ்வளவு நகைகள் போடப்பட்டது என்ன சீர்வரிசை சாமான்கள் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். 1ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பிறகு நீண்ட நாட்களாக வெளிநாட்டில் இருந்து வந்தார் என்றால் இடையில் அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வார். மனுதாரர் எனக்கு உறவினர் இல்லை என்பதால் அவரது திருமணத்தின்போது என்ன சீர்வரிசை செய்யப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் இடத்தில் இருந்து வழக்கின் தரப்பினர்கள் குடியிருந்த இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 கி.மீ. தூரம் இருக்கும்.

திருமணத்திற்கு பிறகு நான் மனுதாரரை அவரது வீட்டிற்கு சென்று பார்த்தது உண்டா என்றால் பார்த்ததுண்டு . நானும் எனது நண்பர் செந்தில் என்பவரும் செல்வோம். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்தின்போது மனுதாரருக்கு போடப்பட்ட நகைகளை விற்றுதான் பிளாட் வாங்கப்பட்டது என்ற விவரம் நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே எவ்வளவு நாட்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியும். 17.07.2022 ம் தேதி மனுதாரரை எதிர்மனுதாரர்கள் துன்புறுத்தி வெளியேற்றியது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். நான் அங்கு சென்றிருந்தேனா என்றால் கேள்விபட்டு சென்றேன். எனக்கு யார் சொன்னது என்றால் காந்திமதி என்ற காவல் ஆய்வாளர் சொன்னார்.

எதிர்மனுதாரருக்கு எதிராக அவர்கள் எனது சாதியை சொல்லி திட்டியதாக நான் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்து அதில் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தற்போது பிணையில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான்

சொல்வதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த பிரச்சனை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. மனுதாரரின் அக்கா கணவர் செந்திலும் நானும் நண்பர்கள் என்பதால் மனுதாரருகககு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் நீண்ட நாட்களாக வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை கொண்டு மனுதாரர் பெயரில் வீட்டுமனை வாங்கி அதில் அவர் சம்பாதித்த பணத்தை கொண்டு வீடு கட்டி குடியேறுவதற்காக வெளிநாட்டில் இருந்து வந்தபோது 1ம் எதிர்மனுதாரர் அனுப்பிய பணத்திற்கு வரவு செலவு கணக்கு கேட்டபோது மனுதாரரும் செந்திலும் சேர்ந்துகொண்டு 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் பிரச்சனை செய்து கொண்டு அவராக வீட்டை விட்டு வெளியேறி பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் மனுதாரரை எந்தகாலத்திலும் அடித்து கொடுமை செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் செந்திலும் சேர்ந்துகொண்டு எதிர்மனுதாரர்களை வீட்டை காலி செய்ய கூறியும், பணம் செட்டில்மெண்ட் செய்ய சொல்லியும் மிரட்டினோம் என்றாலும் எதிர்மனுதாரர்கள் அதற்கு உடன்படாததால் மனுதாரர் மூலமாக பொய்யாக வழக்கினை தாக்கல் செய்து அதற்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**